# பிரதமர் அலுவலகம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல்

**பெறுகை இலக்கம்: PMO/PMD/02/01/15/18**

1. இரண்டு வருட காலத்திற்கு பிரதமர் அலுவலக இடப்பரப்பிற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிரதமர் அலுவலகத்தின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

   அரச அல்லது தனியார் துறை நிறுவனங்களுக்கு 250 ஊழியர்களுக்கும் அதிகமானவர்களைக் கொண்ட சுத்திகரிப்புச் சேவையை வழங்கிய விலைமனுதாரர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவர்.

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் இடம்பெறும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2025 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிரதமர் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிற்கு 9,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பிரதமர் அலுவலகத்தின் பிரதம பெறுகை அதிகாரி / பிரதம கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2025 ஏப்ரல் 08 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, பிரதமர் அலுவலகம், இல. 58, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய முகவரியில் விலைக்கோரல் சமர்ப்பிப்புகள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமூகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

5. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் 400,000.00 (நான்கு இலட்சம்) ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு - 07, இல. 58, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, பிரதமர் அலுவலகம், பிரதம பெறுகை அதிகாரி / பிரதம கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : 0112575317-18 நீடிப்பு - 182-334 / தொலைநகல்: 011 257 4411

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதமர் அலுவலகம்,**
**இல. 58, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 07.**

**2025 மார்ச் 17ஆம் திகதி.**